இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

**பி.எம்.ஐ.சி குணவர்தன எதிர் நில அளவைத் திணைக்களம்**

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு /104//2017- மேன்முறையீடானது 31.10.2017 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்

**வருகை தந்தவர்:** பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

**மேன்முறையீட்டாளர்:** பி.எம்.ஐ.சி குணவர்தன

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** நில அளவையாளர்- பொது/ குறித்தளிக்கப்பட்ட அலுவலர், நில அளவைத் திணைக்களம்- இலங்கை

**தோன்றல் அல்லது பிரதிநிதித்துவம்:**

மேன்முறையீட்டாளர்: வருகை தரவில்லை

பகிரங்க அதிகார சபை: பி.கே.எல்.எஸ். பண்டுவாவல, சிரேஷ்ட நில அளவை மேற்பார்வையாளர்
ஆர்.ஏ.என்.எம். ஜயசேகர, சட்ட அலுவலர்- நில அளவைத் திணைக்களம்

| | |
|---|---|
| **தகவல் உரிமைக்கான கோரிக்கை பதியப்பட்டது** | 26.07.2017 |
| **தகவல் அலுவலர் பதிலளித்தது** | தகவல் அலுவலர் பதிலளித்திருந்தார். ஆனால் அத்திகதி குறிப்பிடப்படவில்லை. |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் முதலாவது மேன்முறையீடு பதியப்பட்டது** | 10.08.2017 |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதிலளித்தது** | குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதிலளித்திருந்தார். ஆனால் |

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

| | |
|---|---|
| | அத்திகதி குறிப்பிடப்படவில்லை. |
| **தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு பதியப்பட்டது** | 25.08.2017 |

மேன்முறையீட்டாளர் வருகை தரவில்லை. பி.கே.எல்.எஸ். பண்டுவாவல, சிரேஷ்ட நில அளவை மேற்பார்வையாளர் மற்றும் ஆர்.ஏ.என்.எம். ஜயசேகர, சட்ட அலுவலர்- நில அளவைத் திணைக்களம் ஆகியோர் பகிரங்க அதிகார சபையின் குறித்தளிக்கப்பட்ட அலுவலரை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர்.

**சுருக்க நிகழ்வுப் பின்னணி**

26.07.2017 எனத் திகதியிடப்பட்டத் தகவல் கோரிக்கையொன்றினூடாக மேன்முறையீட்டாளர் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த தேவைப்பாடுகளுக்கான கொள்முதலுக்காக விடுக்கப்பட்ட ஏலத்தில் (ஏலம் இலக்கம்: SD/I/2017 பிரிவு இல 12: GNSS பெறுனர்கள்- 30 இலக்கங்கள்) எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைக் கோரியிருந்தார்: பின்வருவன குறிப்பாகக் கோரப்பட்டுள்ளனர்:

அ. எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் சமர்ப்பிக்கப்பட்ட ஏலப் படிவம்

ஆ. எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் சமர்ப்பிக்கப்பட்ட ஏல கையொப்ப அதிகாரமளிப்பு ஆவணம்

இ. இதேபோன்ற வேறு விநியோகங்கள் தொடர்பில் (ஏதேனுமிருப்பின்) எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் சமர்ப்பிக்கப்பட்ட கடந்த கால பதிவேடுகள்

ஈ. ஏம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் சமர்ப்பிக்கப்பட்ட சேவை நிலையம்.'. தொழில்நுட்ப பிரிவு தொடர்பான தகவல்கள் (ஏதேனுமிருப்பின்)

உ. எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் சமர்ப்பிக்கப்பட்ட நிறுவன முகப்பு/ நிறுவன அட்டவணை (ஏதேனுமிருப்பின்)

ஊ. எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தரவாத மற்றும் பேணுகை விபரங்கள்/பேணுகைத் திட்டம்

எ. GNSS பெறுனர் கேள்வி மீதான TEC அறிக்கை

ஏ. Hi- Target V60 பெறுனர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளியியல் அவதானிப்பு கோப்புக்கள் (3hr மற்றும் 2hr) (RINEX கோப்புக்களின் மென் பிரதிகள்) மற்றும் மேற்குறிப்பிட்ட தரவுகளை செயன்முறைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட SLCORSNET கோப்புக்கள் (சுஐநேழ கோப்புக்களின் மென் பிரதிகள்)

தகவல் அலுவலர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலர் ஆகிய இருவரும் (எ) இல் கோரப்பட்டத் தகவல் தவிர்ந்து, அதாவது GNSS பெறுனர் கேள்வி மீதான TEC அறிக்கை தவிர்ந்து ஏனைய அனைத்து தகவல்களையும் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(ஈ) வழங்க மறுத்தமையினால் 25.08.2017 அன்று ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யப்பட்டது.

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்**

இவ்விடயத்தில், பிரச்சனையிலுள்ள இக் கேள்வி ஏலமானது ஒரு நில அளவை உபகரணம் தொடர்பானதாகுமென்பதுடன் இது தொடர்பாகவே ஏனையோருடன் இணைந்து மேன்முறையீட்டாளரும் ஏல கோரிக்கையினை விடுத்திருந்தார். எவ்வாறெனினும், அவருடைய கேள்வி மனு அவ் உற்பத்தி பொருளின் துல்லியத்தன்மை தொடர்பான விசாரணையின் காரணமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதாவது, அவ் உபகரணம் கோரப்பட்டத் தேவைக்கு அவ் உபகரணம் பொருத்தமானதாக அமையாது என்பது தொடர்பாக பிரச்சனைகள் எழுந்தன. தகவல் கோரிக்கையினை வாசித்த சட்ட அலுவலர் தகவல் கோரிக்கையின் பிரிவு (எ) வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தகவல் அலுவலர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலர் ஆகிய இருவரும் தகவலின் வெளியிடுகையினை மறுப்பதற்கு சட்டத்தின் பிரிவு 5(1)(ஈ) இனை மேற்கோள் காட்டியுள்ளதாக பகிரங்க அதிகார சபை தெரிவித்திருந்தது:

‘‘பாரிய பொதுமக்கள் அக்கறை அத்தகைய தகவலின் வெளிவிடுகையை அனுமதிக்கின்றதென பகிரங்க அதிகாரசபை திருப்திப்பட்டாலொழிய, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் வர்த்தக அந்தரங்கம், வியாபார இரகசியம் அல்லது புலமைச் சொத்து உட்பட தகவலின் வெளிவிடுகையானது மூன்றாம் திறத்தவரொருவரின் போட்டி நிலைக்கு தீங்குவிளைவிக்குமாக உள்ளவிடத்து’’

எவ்வாறெனினும், அக்கட்டத்தில் அவ்விதிவிலக்கு மேற்கோள்காட்டப்பட்ட போதிலும்கூட, பகிரங்க அதிகார சபை இவ்விடயத்தைக் கவனத்திற் கொண்டு, இவ்விடயத்தில் மூன்றாந் திறத்தவரின் தகவல்களை உள்வாங்கியுள்ளமையினாலேயே தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதனை வலியுறுத்த விரும்பியது. பிரிவு 5(1)(i) இனை அதாவது மூன்றாந் திறத்தவர் என்ற விதிவிலக்கினை பகிரங்க அதிகார சபை மேற்கோள் காட்டுமாயின், சட்டத்தின் பிரிவு 29(1) இன் கீழ் மற்றும் அதற்கமைவாக மூன்றாந் திறத்தவரிடமிருந்து எழுத்துமூலமான சம்மதத்தினைப்

பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதனை ஆணைக்குழு சுட்டிக்காட்டியது. ஆணைக்குழுவின் முன்னிலையில் மேன்முறையீடு காணப்படுகின்ற இக்கட்டத்தில் பகிரங்க அதிகார சபை புதியதொரு விதிவிலக்கினை கோருவதற்கு விரும்புகின்றதா என பகிரங்க அதிகார சபையே தீர்மானிக்க வேண்டும்.

மேன்முறையீட்டாளருக்கு எவ்வாறு பதிலிறுக்க வேண்டுமென்பது தொடர்பில் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு தெளிவு காணப்படவில்லை என்பதுடன் குறிப்பிட்ட விடயம் தொடர்பான தெளிவுபடுத்தலை அவரால் பெற்றுக் கொள்ள முடியவில்லை என பகிரங்க அதிகார சபை கோரியது. ஆகவேதான், அது மறுப்பிற்கான காரணமாக விதிவிலக்கு 5(1) இனை மேற்கோள் காட்டுவதற்கு தன்னை மட்டுப்படுத்தியிருந்தது. சட்டம் தொடர்பில் சரியானதொரு புரிந்துணர்வின்மையினால், அது தொடர்பான சரியான புரிந்துணர்வினை குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பெற்றுக்கொண்டதன் பின்னர் அடுத்த விளக்கத்தின்போது இவ்விடயம் குறித்தளிக்கப்பட்ட அலுவலரினால் தெளிவுப்படுத்தப்படும் என பகிரங்க அதிகார சபையினால் கூறப்பட்டது.

**ஆணை:**

இவ்விடயத்தின் நிகழ்வுகளை மேலும் மதிப்பீடு செய்யும்படி பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்பட்டதுடன் இதுவரை வழங்கப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு அது இணங்குகின்றதா என்பது தொடர்பில் எழுத்துமூலமான சமர்ப்பிப்புக்களை அடுத்த விளக்கத்திற்கு முன்னர் பதிவு செய்யும்படியும் பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்பட்டது. அவ்வாறு குறிப்பிட்டத் தகவல்களை வழங்குவதற்கு பகிரங்க அதிகார சபை மறுக்குமாயின், அது தொடர்பாக இவ் ஆணைக்குழு தீர்மானமொன்றை எடுப்பதன் நிமித்தம் தகவலை மறுப்பதற்கு தங்கியிருக்கின்ற பொருத்தமான விதிவிலக்கினை மேற்கோள் காட்டுமாறு பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

இம்மேன்முறையீடானது 19 ஆம் திகதி டிசெம்பர் மாதம் 2017 ஆம் வருடம் காலை 11 மணிக்கு ஒத்திவைக்கப்படுகின்றது.

---

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு /104//2017- மேன்முறையீடானது 19.12.2017 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

*2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான ஆணை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு*

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்

**வருகை தந்தவர்:** பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

**மேன்முறையீட்டாளர்:** பி.எம்.ஜ.சி குணவர்தன

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** நில அளவையாளர்- பொது/ குறித்தளிக்கப்பட்ட அலுவலர், நில அளவைத் திணைக்களம்- இலங்கை

**தோன்றல் அல்லது பிரதிநிதித்துவம்:**

மேன்முறையீட்டாளர்: வருகை தரவில்லை

பகிரங்க அதிகார சபை: பி.கே.எல்.எஸ். பண்டுவாவல, சிரேஷ்ட நில அளவை மேற்பார்வையாளர்
எஸ்.ஏ.ஆர். சுமேதா, சிரேஷ்ட நில அளவை மேற்பார்வையாளர்

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்**

பகிரங்க அதிகார சபை இதற்கு முன்னைய சந்தர்ப்பத்தில் பிரிவு 5(1)(i) இற்கு கீழான விதிவிலக்கினைக் கோரி, தகவலை வெளியிடுவதற்கு மூன்றாந் திறத்தவரின் அதாவது எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இன் சம்மதம் அவசியமென கூறியிருந்தது. மூன்றாந் திறத்தவர் தனது சம்மதத்தினை எழுத்துமூலமாக மறுத்திருந்தது.

இத்தகைய சந்தர்ப்பத்தில், தகவலின் வெளிவிடுகையிலுள்ள பகிரங்க அக்கறை அதனை வெளியிடாமையில் தங்கியுள்ள தனிப்பட்ட அக்கறையினை விஞ்சி நிற்குமாயின் மாத்திரமே தகவலை வெளியிடுமாறு பணிக்க முடியுமென்பதனை ஆணைக்குழு குறித்து கொண்டது. ஆகவே, குறிப்பிட்டத் தகவலின் வெளியிடுகை எவ்வாறு பகிரங்க அக்கறையினைப் பேணுவதாக அமையும் என ஆணைக்குழு மேன்முறையீட்டாளரை வினவியது. மேலும், தகவல் கோரிக்கையின் அ முதல் எ வரையான பிரிவுகளுக்கே இவ்விதிவிலக்கு ஏற்புடையதாகுமென்றும், பிரிவு ஏ இல் கோரப்பட்டத் தகவல் தொடர்பில் இவ்விதிவிலக்கு ஏற்புடையதாகாதென்றும் ஆணைக்குழு குறித்துக்கொண்டது.

கோரப்பட்ட அனைத்து ஆவணங்களையும் ஆணைக்குழுவின் பணிப்பின்பேரில் வெளியிடுவதற்கு தமக்கு எவ்வித ஆட்சேபனைகளுமில்லை என பகிரங்க அதிகார சபை சமர்ப்பித்தது. மூன்றாந் திறத்தவர் தகவலின் வெளியிடுகையினை மறுத்த ஒரேயொரு காரணத்தினால்தான் பகிரங்க அதிகார சபை தகவலை வெளியிட மறுத்ததாக பகிரங்க அதிகார சபை குறித்து கொண்டது.

இவ்விடயத்திலுள்ள பகிரங்க அக்கறை யாதென மேன்முறையீட்டாளரிடம் ஆணைக்குழு வினவியபோது, ஆகக்குறைவான ஏலப் பணத்தை முன்வைக்காத குறிப்பிட்ட இம் மூன்றாந் திறத்தவருக்கே ஏலம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், அளவையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து பல முக்கியமான விபரங்கள் வழங்கப்படவில்லை என்பதனை அறிந்து கொண்டதாகவும் மேன்முறையீட்டாளர் தெரிவித்தார். இது எவ்வாறு TEC அறிக்கையுடன் (பிரிவு ஏ) தொடர்புறுகின்றது என வினவியபோது, அதற்கு பதிலிறுத்த மேன்முறையீட்டாளர், எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் எவ்வாறு மேன்முறையீட்டாளரின் நிறுவனம் பெற்றுக்கொண்ட புள்ளிகளை விட மிகக்குறைந்தளவில் உயர்வாக உள்ளன என்பதனையும் பகிரங்க அதிகார சபை மதிப்பீடுகளை வழங்கியுள்ளதே தவிர அம்மதிப்பீடுகள் கூட்டப்பட்ட விதம் தொடர்பில் எதனையும் காண்பிக்கவில்லை என்பதனையும் குறிப்பிட்ட அவ்வறிக்கை தெளிவு படுத்தும் என கூறினார். மேலும், எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் ஆனது சட்டத்தினால் தாபிக்கப்படாத ஒரு போலி நிறுவனமாகும் எனவும் மேன்முறையீட்டாளர் கூறினார்.

பிரிவு அ இல் கோரப்பட்டத் தகவலானது, அதாவது எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் சமர்ப்பிக்கப்பட்ட ஏலப் படிவமானது கம்பனி பதிவாளர் அலுவலகத்தினால் பேணப்படுகின்ற ஒரு ஆவணமென்பதனால் அது இரகசியத்தன்மை வாய்ந்த ஆவணமொன்றல்ல என்றும் மேன்முறையீட்டாளர் கோரினார். குறிப்பிட்ட அலுவலகத்திலிருந்து அதன் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு மேன்முறையீட்டாளர் முயற்சித்தபோதும் கம்பனி 2008 ஆம் ஆண்டிலிருந்து தனது பதிவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராமையினால் கம்பனி பதிவாளர் அலுவலகத்தினால் அதனை வழங்க முடியாதிருந்ததாக மேன்முறையீட்டாளர் தெரிவித்தார். கேள்வுமனுக்களை ஆளுகை செய்கின்ற நடபடிமுறைகளில் கையொப்பமிடுகின்ற நபர்கள் அதற்கு அதிகாரமளிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்பதுடன், மொத்த நடபடிமுறையும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதலை உறுதிப்படுத்துகின்ற தரமான விதிகள் மற்றும் நடைமுறைகளுக்கு அமைவானதாக இருக்க வேண்டுமென மேன்முறையீட்டாளர் கூறினார். எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இன் பணிப்பாளர் இவ் ஏலத்தில் கேள்வுமனு சமர்ப்பித்த மற்றுமொரு கம்பனியின் பணிப்பாளராகவும் உள்ளார் என மேன்முறையீட்டாளர் சார்பாகச் சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட கேள்வு மனுக்களில் பொருத்தமான அதிகாரிகள் கையொப்பமிட்டுள்ளனரா என்பதனை உறுதிப்படுத்த விரும்புவதாக தெரிவித்த மேன்முறையீட்டாளர், அவ்வாறு பொருத்தமான அதிகாரிகள் கையொப்பமிட்டிருக்காவிடின் யார்

வேண்டுமென்றாலும் கேள்வு மனுக்களில் கையொப்பமிடலாமென்பதாக பொருள்படும் என்பதுடன் அது கேள்வு மனுக்கள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் மீறலாக அமையும்.

**ஆணை:**

பிரிவு அ- எ வரையில் கோரப்பட்டுள்ள ஆவணங்கள் பகிரங்க ஆவணங்களென எழுத்துமூலமான சமர்ப்பிப்புக்களை மேற்கொள்ளுமாறு மேன்முறையீட்டாளருக்கு பணிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட ஆவணங்கள் சட்டத்தின் பிரிவு 5(1) மற்றும் 29 என்ற விதிவிலக்குகளின்கீழ் மறுக்கப்படுவதாக கூறி தனது சமர்ப்பிப்புக்களை எழுத்துமூலமாக பதிவு செய்யுமாறு பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது. ஏனெனில், விளக்கத்தின்போது குறிப்பிட்ட ஆவணம் மூன்றாந் திறத்தவரினால் இரகசியத்தன்மையின் அடிப்படையில் வழங்கப்படவில்லை என்பதும் அது ஒரு பகிரங்க ஆவணம் என்பதும் தெளிவாகியுள்ளது.

இம்மேன்முறையீடானது 14 ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2018 ஆம் வருடம் பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப்படுகின்றது.

---

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு /104//2017- மேன்முறையீடானது 14.02.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

*2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான ஆணை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
நீதிபதி ரோஹினி வல்கம

**வருகை தந்தவர்:** பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

**மேன்முறையீட்டாளர்:** பி.எம்.ஜ.சி குணவர்தன

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** அளவையாளர் நாயகம்- பொது.'. குறித்தளிக்கப்பட்ட அலுவலர், நில அளவைத் திணைக்களம்- இலங்கை

**தோன்றல் அல்லது பிரதிநிதித்துவம்:**

மேன்முறையீட்டாளர்: பி.எம்.ஐ.சி குணவர்தன
எல்.கே.ஜயசிங்க (மேன்முறையீட்டாளருடன் வருகை தந்தவர்)

பகிரங்க அதிகார சபை: பி.கே.எல்.எஸ். பண்டுவாவல, சிரேஷ்ட நில அளவை மேற்பார்வையாளர்
ஆர்.ஏ.என்.எம். ஜயசேகர, சட்ட அலுவலர்- நில அளவைத் திணைக்களம்

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்**

கோரப்பட்டத் தகவலலில் பிரிவு ஏ இனைத் தவிர ஏனைய அனைத்து பிரிவுகளையும் வழங்குவதற்கு மறுத்தமைக்கான காரணம் குறிப்பிட்ட தகவல்கள் சட்டத்தின் பிரிவு 5(1)(i) இற்குள் உள்ளடக்கப்படுகின்றன என தவறாக புரிந்து கொண்டமையே ஆகுமென பகிரங்க அதிகார சபை தெரிவித்தது. எவ்வாறெனினும், கோரப்பட்டுள்ளவற்றுள் பல ஆவணங்கள் கம்பனி பதிவாளர் அலுவலகத்தினால் பேணப்படுகின்றவை என்பதனால் அவை பகிரங்க ஆவணங்களாகும் என்பது தெளிவாகின்றது. கேள்வு மனுக்களுக்கான ஆவணங்களை பெற்றுக் கொள்கின்றவர் ஏலம் நிறைவுபெறுகின்ற வரையில் அவற்றை இரகசியத்தன்மை வாய்ந்ததாக பேண வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றபோதிலும் கேள்வு மனுக்களுக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள் பொதுவாக இரகசியத்தன்மை வாய்ந்தன அல்ல. ஆகவே, ஏலவே நிறைவு பெற்ற ஏலம் தொடர்பான கேள்வு மனுக்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுகின்றமை தொடர்பில் எவ்வித ஆட்சேபனைகளும் காணப்படாது என்பதுடன் அது தொடர்பில் பிரிவு 5(1)(ஈ) ஏற்புடையதாகாது.

தகவல் கோரிக்கையின் பிரிவு உ இன் கீழ் கோரப்பட்டத் தகவல் (எம்/எஸ் இன்ஸ்டெக் பிரைவட் லிமிடெட் இனால் சமர்ப்பிக்கப்பட்ட நிறுவன முகப்பு நிறுவன அட்டவணை (ஏதேனுமிருப்பின்)) தன்னுடைய பாதுகாவலின் கீழ் இல்லை என பகிரங்க அதிகார சபை கூறியது.

மேலும், தகவல் கோரிக்கையின் பிரிவு ஏ தொடர்பாக (அதாவது, Hi- Target V60 பெறுனர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளியியல் அவதானிப்பு கோப்புக்கள் (3hr மற்றும் 2hr) (RINEX கோப்புக்களின் மென் பிரதிகள்) மற்றும் மேற்குறிப்பிட்ட தரவுகளை செயன்முறைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட SLCORSNET கோப்புக்கள் (RINEX கோப்புக்களின் மென் பிரதிகள்)) கூறுகின்றபோது, அவை மூன்றாந் திறத்தவரினால் சமர்ப்பிக்கப்பட்டவை அல்ல, மாறாக, அவை கேள்வு மனுக்களை சமர்ப்பித்த ஒவ்வொருவரும் தங்களுடைய உபகரணம் தொடர்பான முன்மாதரியினை செய்தததனைத் தொடர்ந்து, அதனை அடிப்படையாகக் கொண்டு யாருக்கு ஏலத்தினை வழங்கலாம் என்ற தன்னுடைய தீர்மானத்தினை

மேற்கொள்வதற்காக பகிரங்க அதிகார சபை மேற்கொண்ட அவதானிப்புக்களே ஆகுமென மேன்முறையீட்டாளர் கூறினார்.

**ஆணை:**

தகவல் கோரிக்கையில் பிரிவு அ-எ (பிரிவு உ இனைத் தவிர்த்து) மற்றும் பிரிவு ஏ இன் கீழ் கோரப்பட்டத் தகவல்களை ஒருவார காலப்பகுதிக்குள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டுமென பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது. அவ் ஆவணம் ஆணைக்குழுவினால் மேன்முறையீட்டாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

மேன்முறையீடு நிறைவு பெற்றது.